முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

தார்ச் சாலை

* **755—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட வனப் பகுதியில் காமராஜர்புரம் முதல் கிழவன்கோவில் வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ள காமராஜர்புரம் மற்றும் கிழவன்கோவில் வரையிலான 8.1 கிலோ மீட்டர் தொலைவுள்ள வனச் சாலையினை 6 மீட்டர் அளவிற்கு அகலப்படுத்தப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இதில் 7 கிலோ மீட்டர் தூரம், திருவில்லிபுத்தூர் சரணாலயப் பகுதியிலும், 1.1 கிலோ மீட்டர் தேனி வனக் கோட்டப் பகுதியிலும் வருகிறது. இச்சாலையின் பெரும் பகுதி, சரணாலயப் பகுதியில் வருவதால், மத்திய வன உயிரின வாரியத்திடம் அனுமதி பெறப்பட்டுள்ளது. இச்சாலை அமைக்க வேண்டிய பகுதிகளில், இயற்கையாக வளர்ந்துள்ள 620 மரங்கள் வெட்டப்பட வேண்டியுள்ளதால், உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெற, வாதுரை தயார் செய்து மத்திய அதிகாரக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அதிகாரக் குழுவின் ஆணை பெறப்பட்டவுடன் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி வனப் பாதுகாப்புச் சட்டம், 1980—ன்கீழ், மத்திய அரசின் முன் அனுமதி பெற்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இச்சாலையைச் சீரமைத்துக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 செப்டம்பர் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், நாங்கள் வணங்கும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கிழவன்கோவில் சாலை, 2001–2006 வரை இருந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில், அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் உருவாக்கப்பட்ட திட்டம். ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி இன்று இந்தியாவின் முதன்மைத் தொகுதியாக விளங்குவதற்குக் காரணம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே வெற்றி பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களான மருத்துவக் கல்லூரி, கலைக் கல்லூரி, ஆண்டிப்பட்டி–சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்ற திட்டங்களை உருவாக்கி அந்தப் பகுதியைச் செழிக்கச் செய்தார்கள். அந்த வகையிலே, முற்போக்கான சிந்தனையுடன் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கம், மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தக் கிழவன்கோவில் சாலை அமைக்கப்பட்டால் விருதுநகருக்குச் செல்லக்கூடிய மக்கள், குறிப்பாக தென் பகுதியிலேயிருந்து செல்லக்கூடிய மக்கள், தூத்துக்குடி, குற்றாலம் திருச்செந்தூர், கன்னியாகுமரி போன்ற பகுதிகளுக்குச் செல்லக்கூடிய மக்கள், 120 கிலோ மீட்டர் மிச்சப்படுத்தப்படும் என்பதுதான். ஆகையால்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கிழவன்கோவில் சாலை அமைக்கப்பட வேண்டுமென்று திட்டம் தீட்டி, தேனி மாவட்ட வனப் பகுதிக்குட்பட்ட பகுதியில் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. விருதுநகர் மாவட்டத்தில் இருக்கின்ற வனப் பகுதிக்குண்டான சாலைப் பணிகள் முடிக்கப்படவில்லை. இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்தால், அந்தப் பகுதி மக்களுக்குச் சிறப்பானதொரு திட்டமாக இந்தத் திட்டம் இருக்கும் என்பதைக் கூறிக் கொள்கிறேன். எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கிக் கேட்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழவன்கோவில்–காமராஜர்புரம்

சாலை 8.1 கிலோ மீட்டர் சாத்தூர் காப்புக் காட்டில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சாலையாகும். இதில் 7 கிலோ மீட்டர் தூரம் விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில்கள் சரணாலயப் பகுதியிலும், 1.1 கிலோ மீட்டர் தூரம் தேனி மாவட்ட வனக் கோட்டப் பகுதியிலும் வருகிறது. 14–2–2004 ஆம் நாளைய உச்ச நீதிமன்ற ஆணையின்படி, வனம் அல்லாத பிற பணிகள், வன உயிரின சரணாலயப் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றால், உச்ச நீதிமன்றத்தினுடைய முன் அனுமதி ஆணையைப் பெற்ற பிறகே செய்யப்பட வேண்டும். மேலும், உச்ச நீதிமன்றத்தினுடைய மத்திய அதிகாரக் குழு, 2–7–2004 ஆம் நாளிட்ட ஆணையில், உச்ச நீதிமன்ற ஆணையை வலியுறுத்தியும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட பணிகள் ஏதேனும் மற்ற துறையினராலோ, வனத் துறையாலோ அவசியம் செய்யப்பட வேண்டுமெனில், உச்ச நீதிமன்றத்தின் முன் ஆணை பெற வேண்டுமெனத் தெரிவித்துள்ளது. மேற்படி சாலை அமைக்க, முதலில் தேசிய வன உயிரின வாரியத்தின் அனுமதிக்கான கோரிக்கை, தேசிய வன உயிரின வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவ்வாரியம் மேற்படி சாலையை 6 மீட்டர் அகலத்திற்கு மிகாமல் அமைக்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. சரணாலயப் பகுதியில் அமைக்கப்படவுள்ள இடத்தில் சுமார் 620 எண்ணிக்கை கொண்ட இயற்கையாக வளர்ந்துள்ள மரங்களை வெட்ட வேண்டியிருப்பதால், மத்திய அதிகாரம் பெற்ற குழுவின் மூலமாக உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெற வாதுரை தயார் செய்து மத்திய அதிகாரம் பெற்ற குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மத்திய அதிகாரம் பெற்ற குழு இது தொடர்பாக இரண்டு முறை கூட்டம் நடத்தியுள்ளது. இக்கூட்டத்தில் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு இச்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்துள்ளார்கள்.

முற்பகல் 10–35

மேலும், இதுகுறித்து இக்குழுவினால் மேற்கொண்டு கோரப்பட்டுள்ள விவரங்கள் தரப்பட்டு மத்திய அதிகாரம் பெற்ற குழுவிடமிருந்து பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்வில் இயற்கையாக வளர்ந்துள்ள 620 எண்ணிக்கை கொண்ட

மரங்களை வெட்ட உச்ச நீதிமன்றத்தில் அனுமதி பெற்றபின், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980—ன்படி கருத்துரு தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி, இதற்கு உரிய அனுமதி பெற்றபின் இந்தச் சாலையை அமைக்க இயலும். மேற்படி சாலை அமைக்க உச்ச நீதிமன்றத்தின் முன் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

புறவழிச் சாலை

*906—**திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு—ஆரணி சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு—ஆரணி சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால் புறவழிச் சாலை அமைக்க திட்டமிடப்பட்டு ரூபாய் 3.24 கோடி மதிப்பில் 9.82 எக்டேர் நிலத்தைக் கையகப்படுத்தும் கருத்துரு ஆய்வில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.